13th March 1964]

(உ) சேதமடைந்த படகுகளுக்காக வசூலிக்கப்பட்ட தொகை எவ்வளவு?

கனம் திரு. கோ. பூவராகன்: (அ) to (உ) சபையில் ஓர் அறிக்கை' வைக்கப்பட்டுள்ளது.

அறந்தாங்கி பஸ் நிலையம்

*246 கேள்வி.—**திரு. ஆ. துரையரசன்:** கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

அறந்தாங்கி பஸ் நிலையப் புதிய கட்டிடத்திற்காக ஊராட்சி மன்றத்தாரால் கோரப்பட்ட கடன் கொடுக்கப்பட்டதா? அப்படியானால் எவ்வளவு?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: இல்லை. இக்கேள்விக்கு இடமில்லை.

Gold control

*247 *Q.*—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any proposals were sent to the Union Government suggesting modifications to gold reforms in the light of the recent debate in the Assembly on the Governor's Address; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) No.

(*b*) Does not arise.

Cauvery water for Madras

* 248 *Q.*—SRI K. A. MATHIALAGAN: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether it is a fact that the Cauvery Water Scheme for the Madras City would be taken up with American help in the near future; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: (*a*) No.

(*b*) Does not arise.

Water-supply for ryots in Madurai district

* 249 *Q.*—SRI P. K. MOOKIAH THEVAR: Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether there is any proposal to give a perennial source of water-supply to the agriculturists in the Tirumangalam, Usilampatti and Natham firkas in the Madurai district; and

---

' 558-559-ம் பக்கங்களிலுள்ள இணைப்பைக் காண்க.

(b) if so, the details of the scheme?

கனம் திரு. வெ. ராமையா : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. கரு. சீமைச்சாமி : தலைவர் அவர்களே, இந்தத் தேசிய நெருக்கடி சமயத்தில் உணவு உற்பத்தியை அதிகமாகப் பெருக்க வேண்டுமென்று சொல்லுகிற நேரத்தில் அதைக் குறித்தாவது மீண்டும் பரிசீலனை செய்ய அமைச்சர் அவர்கள் யோசிப்பார்களா ?

கனம் திரு. வெ. ராமையா : உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்பதை யெல்லாம் மனதில் வைத்துக்கொண்டுதான் இந்த முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. செ. மாதவன் : மதுரை மாவட்டத்திற்கு இப்போது கொடுக்கப்பட்டு வரும் தண்ணீர் சப்ளையை மறு பரிசீலனை செய்து மீதப்படும் தண்ணீர் ராமநாதபுரம் மாவட்டத்திற்குக் கொடுக்க அரசாங்கம் மறு பரிசீலனை செய்யும் உத்தேசம் உண்டா ?

கனம் திரு. வெ. ராமையா : மதுரை மாவட்டத்திற்குக் கொடுக்கும் தண்ணீரை மீதப்படுத்தி ராமநாதபுரம் மாவட்டத்திற்குக் கொடுக்க வேண்டும் என்ற நிலைமை இல்லை. மதுரை மாவட்டத்திலேயே இன்னும் அதிகமான வரண்ட பகுதி இருக்கிறது. இன்னும் விஸ்தரித்துக் கொடுக்கலாம். மதுரை மாவட்டத்திற்கு குறைத்து ராமநாதபுரம் மாவட்டத்திற்குக் கொடுக்கவேண்டும் என்பதல்ல. ஆனால் ராமநாதபுரம் மாவட்டத்திற்குப் போதுமான தண்ணீரைக் கொடுக்க என்ன செய்ய வேண்டுமோ அது தொடர்ந்து பரிசீலனையில் இருக்கிறது.

திரு. செ. மாதவன் : இப்பொழுது மதுரை மாவட்டத்தில், இரு போகத்திற்குத் தண்ணீர் விடுவதை ஒரு போகமாக்கி, மிகுதிப்படும் தண்ணீரை ராமநாதபுரம் மாவட்டத்திற்குக் கொடுக்கக் கூடிய திட்டம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமையா : இந்தக் கேள்வி எழுந்தது கனம் அங்கத்தினர் புலவர் கோவிந்தன் அவர்களின் ஆலோசனையிலிருந்து என்று நினைக்கிறேன். ஆனால், இதெல்லாம் மிக ஜாக்கிரதையாகச் செய்ய வேண்டிய காரியங்கள். காரணம், ஒரு மாவட்டத்திற்குக் கிடைக்கக்கூடிய தண்ணீரைக் குறைத்து மற்றொரு மாவட்டத்திற்குக் கொடுக்க முயற்சி எடுக்க முற்பட்டால், அந்த மாவட்டத்திலுள்ளவர்களிடமிருந்து கடுமையான எதிர்ப்பு வரும். இந்த ஆலோசனையை இப்பொழுது பரிசீலனை செய்வதற்கு நான் தயாராக இல்லை.

திரு. கரு. சீமைச்சாமி : இனிமேல் மதுரை மாவட்டத்தில் அதிகமான பிரதேசத்திற்குத் தண்ணீரை விஸ்தரிக்காமல், ராமநாதபுரம் மாவட்டத்திற்குக் கொடுப்பது பற்றி யோசிப்பார்களா ?

கனம் திரு. வெ. ராமையா : மதுரை மாவட்டத்தின் தேவையையும் மனதில் நினைக்கவேண்டும். அதேபோல ராமநாதபுரம் மாவட்டத்தின் தேவையையும் மனதில் கொள்ளவேண்டும்.

13th March 1964]

எங்கெங்கே தண்ணீர் கொடுத்தால் அதிக லாபம், பலன் தருமோ அந்த இடத்திற்கு தண்ணீர் உபரியாக இருக்கும் பட்சத்தில் கொடுப்பதற்கு வேண்டிய முயற்சி எடுப்போம்.

திரு. செ. மாதவன்: மதுரை மாவட்டத்தை ஒட்டிய பகுதிகளுக்கு இப்போழுது தண்ணீர் விடுவது சர்க்கார் இஷ்டத்தைப் பொறுத்திருக்கிறது என்று சொல்லுகிறார்கள். மதுரை ஆயக்கட்டோடு சேர்த்து, ராமநாதபுரம் பகுதியில் உள்ள விவசாயிகளுக்குக் கட்டாயம் தண்ணீர் விடும்படியான ஒரு நிலையை ஏற்படுத்த முடியுமா?

கனம் திரு. வெ. ராமைய்யா: ராமநாதபுரம் மாவட்டத்தில் புது விஸ்தரிப்பைப் பார்த்தோமானால், உண்மையிலேயே மதுரை மாவட்டத்தில் ஓரளவுக்குக் கட்டுப்படுத்தி, அதில் கிடைக்கக் கூடிய உபரித் தண்ணீரை ராமநாதபுரம் மாவட்டத்திற்குக் கொடுத்திருக்கிறோம். கொஞ்சம் கொடுத்த உடனே, இப்பொழுது ராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் அதிகமாக வேண்டும் என்று கேட்கிறார்கள். மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த அங்கத்தினர்கள் இப்பொழுது இங்கே இல்லை. ஆகையால், இந்த இரண்டு அங்கத்தினர்களும் மாறி மாறிக் கேள்வியைப் போட்டு, எப்படியாயினும் என்னிடமிருந்து ஒரு உறுதியை வாங்கிவிடவேண்டுமென்று நினைக்கிறார்கள். நான் உறுதி கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறேன். எங்கே வறண்ட பகுதியாக இருக்கிறதோ, அங்கெல்லாம் கொடுக்க வேண்டுமென்பதுதான் முடிவு. அதற்கு வேண்டிய முயற்சிகள் எடுத்துக்கொண்டு வருகிறோம். எல்லா மாவட்டங்களிலும் மதுரை மாவட்டத்திலும் பின்தங்கிய பகுதி வறண்ட பகுதி இருக்கிறது. அந்தப் பகுதிகளை ஞாபகம் வைத்துக் கொள்ள வேண்டும். ஒரு சில நாட்களுக்கு முன்பு ஒரு கேள்விக்குப் பதில் சொல்லக் கூடிய முறையில் அல்லது பொது விவாதத்தின்போது ஒரு பிரச்னை எழுப்பப்பட்டது. வைகை அணையை மதுரை வட்டாரத்தில் கட்டி, அங்கிருந்து தண்ணீரை எங்கேயோ எடுத்துக்கொண்டு போய், அதிலும் குறிப்பாக கிழக்கு ராமநாதபுரம் பகுதிக்குக் கொடுக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. வைகை அணைக்கு அருகாமையிலேயே பின்தங்கிய பகுதி இருக்கிறது, அந்தப் பகுதிக்கு ஏன் கொடுக்கவில்லை என்ற பிரச்னை எழுப்பப்பட்டது. அதையெல்லாம் ஞாபகத்தில் வைத்து முடிவு செய்கிறோம்.

திரு செ. மாதவன்: பெரியாறு திட்டத்திலிருந்து கிடைக்கக் கூடிய தண்ணீர் இப்பொழுது ஒழுங்காக விடப்படாத காரணத்தினால் தண்ணீர் சேதமாகிறது என்றும், அதை மறு பரிசிலனை செய்து, அப்படிச் சேதமாகிற தண்ணீரை மீதப்படுத்தி ராமநாதபுரம் மாவட்டத்திற்குக் கொடுக்கலாம் என்றும் என்ஜினியர் ஆலோசனை கூறியது உண்மையா?

கனம் திரு. வெ. ராமைய்யா: கனம் அங்கத்தினர் உண்மையிலேயே தண்ணீர் வினியோக முறையைக் கொஞ்சம் கவனிக்கவில்லை என்று நினைக்கிறேன். ஏனென்றால், இந்த வருஷம் மிக நுணுக்கமாகக் கவனம் செலுத்தி ஒரு பொட்டுத் தண்ணீர்கூட

[13th March 1964

விரயம் ஆகவிடவில்லை. அங்கத்தினர் அவர்கள் நினைக்கிறபடி தண்ணீரை விரயம் செய்யவேண்டும் என்ற மனப்பான்மை இந்த இலாகாவை நடத்துபவர்களுக்கு சற்றும் இல்லை என்று திட்ட வட்டமாக நான் சொல்ல முடியும். ராமநாதபுரம் மாவட்டத்திற்குத் தண்ணீர் போக முடியாமல் பெரியாற்றில் அவ்வளவு குறைவாகத் தண்ணீர் இருந்தது. என்ஜினியர்கள் மிக நுணுக்கமாகக் கவனித்ததினால்தான் இந்த வருஷம் ராமநாதபுரம் மாவட்டத்திற்குத் தண்ணீர் கொடுத்திருக்கிறோம்.

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்: ராமநாதபுரம் மாவட்டத்தை ஒட்டியிருக்கக்கூடிய திருநெல்வேலி மாவட்டத்திற்கு ஏதாவது விமோசனம் சமீபத்தில் ஏற்படுமா?

கனம் திரு. வெ. ராமைய்யா: இந்தத் தண்ணீரை நீட்டிவிட முடியும் என்றால், அதையும் கவனிக்கத் தயாராக இருக்கிறோம். ஏனென்றால், எப்படியாவது கஷ்டங்கள் தீரவேண்டுமென்பதுதான் என்னுடைய ஆசை.

திரு. தா. சின்னசாமி: ஆடு அபிவிருத்தித் திட்டம் நமது நாட்டில் மிகவும் முக்கியமாக இருப்பதினால், கோமுகா நதித் தண்ணீரை எப்படியாவது ஆடு அபிவிருத்திக்காகக் கொண்டுவர ஆவன செய்ய முடியுமா?

கனம் சபாநாயகர்: எந்த ஜில்லா?

திரு. தா. சின்னசாமி: தென்னாற்காடு, சேலம் பார்டர் . . .

கனம் சபாநாயகர்: அதைப்பற்றி பிறகு கேட்டுக்கொள்ளலாம்.

ரிக்ஷா வண்டிகளை நீக்குதல்.

*250 கேள்வி.—**திரு. முனு. ஆதி:** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை நகரில் ரிக்ஷா வண்டிகளை நீக்கிவிட்டதுபோல் ஏனைய மாவட்டங்களிலும் அவற்றை நீக்கும் உத்தேசமுண்டா?

(இ) ஆமெனில், இதனால் பாதிக்கப்படுபவர்களுக்கு மாற்று வேலை தரப்படுமா?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) There is no ban on plying of rickshaws either in Madras City or in the mufassal; but only new licences are not granted.

(*b*) The question of providing alternative employment does not arise. The intention is to eliminate rickshaws gradually. However, instructions have been issued to give preference in the matter of employment to ex-rickshaw pullers and drivers, when vacancies arise.

திரு. முனு. ஆதி: ரிக்ஷா வண்டிகளை நீக்கிவிட்டு, சைகிள் ரிக்ஷாக்களை விடலாம் என்ற எண்ணமாவது உண்டா? அந்தத் தொழிலாளர்களுக்கு பிரத்யேகச் சலுகைகள் கொடுக்க வேண்டும் என்று அதிகாரிகளிடத்தில் சொல்லப்பட்டிருந்தாலும்